## தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு

போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன்

இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

வருமானம் அல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 547,787,346 ஆக இருந்த போதிலும், திறைசேரி கணனி அச்சிடல் (SA 21) இன் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 533,011,912 ஆக இருந்தமையால் ரூபா 14,775,434 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | செலவினத் தலைப்பு 263 இற்கு மேலதிகமாக வரிசை அமைச்சின் முற்பண பெறுவனவுகள் மற்றும் வைப்பாக எடுக்கப்படாத மோட்டார் வாகன வருமானமும் வருமானம் அல்லாத பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நிதிச் செயலாற்றல் கூற்றை தயாரிப்பதற்காக செலவின தலைப்பு 263 இன் பெறுவனவுகள் மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 நிதிநிலைமைக் கூற்று

---

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,356,237,188 ஆக இருந்ததுடன், திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 5,145,977,819 ஆக இருந்தமையால் நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 210,259,369 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாட்டை திறைசேரியுடன் கலந்துரையாடி 2021 இன் நிதிக் கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | வேறுபாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளின் கீழ் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் முற்பண செலுத்துகைகள் ரூபா 20,633,616 தொகை குறைவாகவும், முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் | இது கைத்தவறினால் ஏற்பட்ட தவறாகும். | சரியாக கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

வைப்பு செலுத்துகைகள் ரூபா 20,633,616 தொகை அதிகரித்தும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி ஏற்பாட்டின் சேமிப்பு. | | |
| 05 செலவின விடயங்களின் வருடாந்த நிதி ஏற்பாட்டில் 07 சதவீதம் முதல் 32 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கட்டிட பராமரிப்பு நடவடிக்கைகள் குறைவடைந்தமை, உத்தியோகத்தர்கள் இடம்மாற்றலாகிச் சென்றமை, சந்தையில் காணப்பட்ட பொருட்களின் பற்றாக்குறை, ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளை இரத்துச் செய்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படாமையினால் சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. | தேவையினை கவனத்தில் கொண்டு பணிகளுக்காக போதியளவான நிதி ஏற்பாடுகள் மாத்திரம் ஒதுக்கப்பட வேண்டும். |

(ஆ) நிதி ஏற்பாட்டின் பயன்பாடு

-----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 02 செலவின விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் போதியளவான நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 05 சதவீதம் முதல் 08 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்தது. | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளங்களுக்காக கொரோன தொற்று நோயினால் மேலதிக விடுமுறை தின சம்பளங்கள் செலுத்துதல், புதிய அலுவலக கட்டிடங்கள் வழங்கப்பட்டமையினால் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்காக உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையும் காலரீதியில் விலைகள் அதிகரித்துச் சென்றமையும் காரணமாக இருந்தது. | எதிர்வரும் நிதி ஆண்டிற்காக செலவின மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமையினால் 06 செலவின விடயங்களில் வருடாந்த நிதி ஏற்பாட்டில் 01 சதவீதம் முதல் 34 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நோயினால் செலவினங்கள் குறைவடைந்தமை மற்றும் ஆதன கடன்கள் வழங்கப்படாமை போன்றவை காரணமாக இருந்தது. | தேவையினை கவனத்தில் கொண்டு செலவின விடயங்களுக்காக போதியளவான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் அட்டவணை இலக்கம் III இன் கீழ் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் காண்பிக்கப்படாத போதிலும், திறைசேரி கணனி அச்சிடலின் பிரகாரம் (SA-92) ரூபா 189,008 தொகை கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. | இந்த பெறுமதி பெயரளவு பெறுமதியாக மாத்திரம் இருந்தமையும் தொடர்ந்தும் செலுத்துவதற்கு உள்ள உரித்தொன்று இல்லாதவையாகும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) பொறுப்புக்கள் பதிவேட்டில் காணப்பட்ட பெறுமதி ரூபா 211,316 தொகையான 04 பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்று - (i) இல் அட்டவணை (iv) இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 04 பொறுப்பு விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று (1) அட்டவணை iv இல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,809,302,656 தொகையான நிதி ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 3,794,864,946 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 14,437,710 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நோய் நிலையினால் நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியாமையின் காரணமாக இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட சகல நிதி ஏற்பாடுகளையும் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 07 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையை விஞ்சி ரூபா 3,176,850 தொகை செலவிடப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாட்டின் பற்றாக்குறை தொடர்பாக உரிய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையின் அடிப்படையில் செலவினங்கள் செய்யப்படல் வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| குறித்துரைத்த காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட வேண்டியிருந்தமை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட வேண்டிய போதிலும், அறிக்கையில் 3.4 ஆம் பந்தியில் காண்பிக்கப்படுகின்ற கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றோம். | கணக்காய்வு அவதானிப்புகளுக்கு குறித்த காலத்தில் பதில் வழங்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (அ) 128(1)(ஏ) | அம்பலந்தொட்டை, லுணுகம்வெஹர, திஸ்ஸமஹாராம, தங்காலை பிரதேச செயலகங்களின் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் சிக்கனமாகவும் | நிதிப் பிரமாணம் 128(1)(ஏ) இன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அபிவிருத்தி திட்ட மதிப்பீடு தயாரிக்கும் போது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சிக்கனமாகவும், செயற்திறனாகவும், முறையாகவும் மற்றும் உண்மையான தன்மையின் காரணங்களின் அடிப்படையில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைகான பொறுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திறனாகவும் முறையானதாகவும் உள்ளபடியானதாகவும் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 702(3) | வேலைகளுக்குரிய உடன்படிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சூரியவெவ, அம்பாந்தோட்டை மற்றும் அம்பலாந்தொட்டை பிரதேச செயலகங்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்குமாறு சகல உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 702(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்து வைத்தல்.

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கட்டுவன பிரதேச செயலகத்தில் ஓய்வு பெற்றுச் | ரூபா 141,260 தொகையான கடன் மீதி மாத்திரம் தீர்த்து | காலவதியான கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 141,260 தொகையான கடன் அறவிட வேண்டியிருந்தது. | வைக்கப்பட்டிருக்க வில்லை. | வேண்டும். |
| (ஆ) | வேலை நீக்கம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தினை விஞ்சிய ரூபா 443,538 தொகையான செயற்பாடற்ற கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 135,472 தொகையான கடன் தொகைக்கான உரிய கோவைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது டன், ரூபா 308,066 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது டன். மிகுதி கடன் மீதி ரூபா 8,000 தொகையினை தவணை மூலம் அறவிடப்படும். | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சேவையை கைவிட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடம் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 314,515 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய காணப்பட்டது. இந்த கடன் மீதியை கடன் காரர்களிடம் இருந்து அறவிடுவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் அது தொடர்பாக தாபன விதிக் | கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 பிரிவின் பிரகாரம் பிணையாளர்களிடம் இருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்கு இலக்கம் 6000–0–0–16–0–43 இன் கீழ் பெறப்பட்ட ரூபா 794,692 கூட்டுத்தொகையான 09 நிறுத்தி வைத்தல் பண வைப்புக்கள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 02 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும், உரிய வைப்பாளர்களுக்கு செலுத்துவதற்கோ அல்லது நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 170,644 தொகை தீர்க்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமானம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------

## 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் நலிவுகள்

-------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலைகளுக்காக மதிப்பீட்டை தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு விகிதத்தை ஈடுபடுத்தாதிருந்தமையினால் சப்பிரிகம சனசமூக கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 191,742 தொகை பொலியர்வத்தை வாராந்த சந்தை அமைக்கும் வேலைகளுக்குரிய ரூபா 128,310 தொகை, லுணுகம்வெஹர வாராந்த சந்தை அபிவிருத்தி செய்யும் வேலைகளுக்குரிய ரூபா 193,930 தொகை மற்றும் காமன்திஸ்ஸ, துரு செவன வளவில் வாராந்த சந்தை நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 143,053 தொகையாக கூட்டு மொத்தமாக ரூபா 657,035 தொகை அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டிருக்குமாயின் அறவிடுவதற்கும் மற்றும் எதிர்காலத்தில் மாவட்ட பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பொலியர்வத்தை வாராந்த சந்தை வளவில் அமைக்கும் வேலைகளுக்குரிய கட்டிடத்திற்கு கூறுவிலை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. லுணுகம்வெஹர வாராந்த சந்தை அபிவிருத்தி வேலைகளுக்கு உரிய பிரதேச சபைகளில் இருந்து பதில் பெறப்பட்டு | நிதிப் பிரமாணக் கோவையின் 50(II) இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். காவன்திஸ்ஸ துரு செவன வளவில் வாராந்த சந்தை நிர்மாணிக்கும் வேலைகளுக்குரிய ரூபா 143,055 தொகை குறைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 05 பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்பட்ட 07 வேலைகளுக்குரிய மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக கொடுப்பனவு விகிதாசாரம் ஈடுபடுத்தப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 842,872 தொகை அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் இந்த முரண்பாடுகளை குறைக்கும் வகையில் மதிப்பீட்டை தயாரிப்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட பொறியியலாளரின் மூலம் ஆலோசனை பெறப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணக் கோவையின் 50(II) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சூரியவெவ பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் அலிஒலுஆர விவசாய வாய்க்கால் அணைக்கட்டை தயாரிக்கும் போது விலைப் பட்டியல் விடய இலக்கம் 02 இன் மண் நிரப்புதல் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், ரூபா 66,400 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்த முரண்பாடுகளை குறைக்கும் வகையில் மதிப்பீடு தயாரிக்குமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணக் கோவையின் 50(II) இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திஸ்ஸமஹாராம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் பஹே கெதர அருகில் இருந்து சிங்கள கெதர வரையான வீதியில் பக்க சுவரை நிர்மாணித்தல் மற்றும் சிறு கொங்கிரீட் கற்கள் பதிக்கும் செயற்திட்டத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சிறு கொங்கிரீட் கற்களில் 50 சதவீதமும் எதிர்பார்த்த வலுவினை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | அதன் கொள்ளளவு சக்தி சராசரியான பெறுமதி கணிப்பிடல் 30 NMM-2 இற்கு மேற்பட்டமையினால் அதன் பிரகாரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த கொள்ளளவு சக்தி காணப்பட வேண்டும். |
| (உ) | தேரப்புத்தாஹயகம, ஸ்ரீ ராகல்கம, சியல்செத்கம என்ற கிராமங்களில் உள்ளக வீதிகளுக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் போது கிரவல் கன மீற்றர் 96.2 குறைவாக ஈடுபடுத்தப்பட்டமையினால் ரூபா 117,874 அதிகரித்து செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | மாவட்ட பொறியியலாளரின் மூலம் ஆலோசனை பெறப்பட்டு அதன் பிரகாரம் எதிர் கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சரியான அளவிடைகள் பெறப்பட்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கிரிந்தாகம ஆரம்ப பாடசாலையின் கட்டிடம் மற்றும் விளையாட்டு மைதானத்தை சுற்றி வேலியமைக்கும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் விஷேட வீதத்தில் (SSR) தயாரிக்கப்பட்ட போதிலும், அது பொறியியலாளர் மூலம் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன், துருப்பிடிக்காத வர்ணங்கள் பூசப்படாதிருந்த போதும் அதற்காக ரூபா 84,366 தொகை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | விஷேட வீதத்தில் தயாரிக்கும் போது (SSR) கூறு விலை பெறப்பட்டு மதிப்பீடு தயாரிக்குமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் மாவட்ட பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் குறித்த இடத்தில் மாத்திரம் துருப்பிடிக்காத வர்ணங்களை பூசுதல் மற்றும் எனாமல் வர்ணங்கள் இரு தடவை பூசுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விலை வீததத்தை குறைத்து விலைப் பட்டியல் செலுத்தப்பட்டுள்ளது. | விஷேட வீதத்திற்காக அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருந்ததுடன், நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 23 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பாதுகாப்பு உள்நாட்டு அலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021.02.11 ஆம் திகதிய கடிதம் மூலம் 2021 மே மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இழப்புக்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்று<br>---<br>1987 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக ஏற்பட்டிருந்த 32 சம்பவங்களுக்குரிய கூட்டு மொத்தமான ரூபா 8,611,826 தொகையான இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (ஆ) | நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் அட்டவணை 01 இன் கீழ் 252-9828 கெப் வண்டி விபத்திற்கு உட்பட்டமைக்கு உரியதாக அறவிடப்படாத நட்டத்தின் பெறுமதி ரூபா 70,300 தொகை அதிகரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்பட்ட கைவிடல்களின் காரணமாக கணக்கு தயாரிக்கும் போது மொத்த பெறுமதியான ரூபா 91,000 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தமை. | சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1987 ஆம் ஆண்டில் பொருட்களுக்கு ஏற்பட்ட ரூபா 10,000 தொகையான இழப்புக்களின் பெறுமதி 2020 சனவரி 20 ஆம் திகதி புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்ட போதிலும், அப்பெறுமதி புத்தகங்களில் பதிவழித்தல் தொடர்பான கூற்று அட்டவணை II இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஈ) | 1987 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 02 வருடங்களுக்கும் 33 வருடங்களுக்கும் இடையிலான காலமொன்று கடந்திருந்த ரூபா 25,000 தொகைக்கு குறைவான பெறுமதியுடைய 09 சம்பவங்களுக்குரிய ரூபா 73,253 கூட்டுத்தொகையான இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 1987 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த ரூபா 25,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய 23 சம்பவங்களுக்குரிய ரூபா 8,538,572 கூட்டுப் பெறுமதியான இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை.

| கணக்காய்வு ஐயவினா தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு 2019 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 3,500,000 பெறுமதியுடைய கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியில் இந்த பந்திக்காக பதில் வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் விரிவான பதில் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த காலப்பகுதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் அளிக்கப்பட வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சிரிபுர புதிய நிர்வாக தொகுதிக்கு அடுத்தாலுள்ள உத்தியோகத்தர்களின் வீடமைப்பு தொகுதியின் நீர் பட்டியலை செலுத்தியதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் | உரிய உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு நீர் | குறித்த பிரகாரம் மீளளிப்பு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 2,578,309 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கட்டணம் செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன், அதன் பிரகாரம் எதிர் காலத்தில் நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். | |
| (ஆ) | 2020 ஒக்டோபர் மாதம் கணனி மயப்படுத்தப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவு தரவு தொகுதியின் பிரகாரம் அம்பலந்தொட்டை பிரதேச செயலகத்தில் 7 ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் மற்றும் லுணுகம்வெஹர பிரதேச செயலகத்தில் ஒரு உத்தியோகத்தருக்காக தேசிய அடையாள அட்டை இன்றி ஓய்வூதிய சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | ஓய்வூதிய அடையாள அட்டை காணாமல் போயிருந்ததுடன், நோய்வாய்ப்பட்டிரு ந்தமையினால் புகைப்படம் எடுப்பதில் உள்ள வசதியீனத்தினால் புதிய அடையாள அட்டையினை தயாரிப்பதற்கு முடியாதிருந்தமை. | ஓயூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2008 ஒக்டோபர் 03 ஆம் திகதி 09/2008 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை, 2010 மார்ச் 30 ஆம் திகதி 09/2008 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை (திருத்திய), 2018 யூலை 17 ஆம் திகதிய 09/2008 ஆம் இலக்க (திருத்தப்பட்ட ii) ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கைகளின் | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை 2021 பெப்ரவரி மாதம் முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பந்தியிலக்கம் 3(ii) மற்றும் 2019 மே 09 ஆம் திகதிய ஓய்வூதிய ஆலோசனைக் கடித இலக்கம் 06/2019 இன் பிரகாரம் இராணுவ சேவை மற்றும் இயலாதவர்களின் ஓய்வூதியங்கள் ஒன்றிணைக்கப்பட்டு செலுத்த வேண்டியிருந்ததுடன், ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 9/2008 (திருத்திய ii) இன் 3 ii ஆம் பந்தியின் பிரகாரம் மாற்றப்பட்டதன் பின்னர் இயலாதவர்களுக்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 4,404.97 ஆக இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் அம்பலந்தொட்டை பிரதேச செயலகத்தில் 06 ஓய்வூதியக்காரர்கள் மற்றும் லுணுகம்வெஹர பிரதேச செயலகத்தில் 09 ஓய்வூதியக்காரர்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | 2011 மே 16 ஆம் திகதிய 04/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் 2014 நவம்பர் 03 ஆம் திகதிய 13/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி என்பவற்றின் | இந்த படிகள் செலுத்துதல் நிறுத்தப்பட்டு இது வரை மேலதிகாக செலுத்தப்பட்ட தொகையை 2021 பெப்ரவரி மாதம் முதல் | ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் சில ஓய்வூதியங்கள் ஒன்றிணைக்கப்பட்டு வழங்கப்படுகின்ற போது ஒன்றிணைக்கப்பட்ட ஓய்வூதிய சம்பளம் மாத்திரம் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் உரித்தான விஷேட படிகள் வழங்க வேண்டியிருந்த போதிலும், ஓய்வூதிய சம்பளம் செலுத்தும் போது 02 பிரதேச செயலகங்களினால் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையினால் ரூபா 782,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | ஒன்பதாவது பாராளுமன்றத்தின் 2012 ஒக்டோபர் 25 ஆம் திகதிய அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் 16 ஆவது தீர்மானத்தின் கீழ் ‘‘நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 2012 ஒக்டோபர் 12 ஆம் திகதி வரை மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்படாத மாவட்ட செயலகத்திற்குரிய காணியில் நிர்மாணிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 22 உத்தியோகபூர்வ விடுதிகள் கைப்பற்றப்பட்டதன் பின்னர் மேற்கூறப்பட்ட கட்டளைத் திகதி முதல் இரண்டு மாதங்களில் அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவிற்கு அறிக்கையிடுவதற்காக’’ | சில சந்தர்ப்பிங்களின் போது நகர அபிவிருத்தி அதிகார சபைக்க அறிவிக்கப்பட்டிருந் ததுடன், இது தொடர்பாக சிறந்த பதிலொன்று கிடைத்திருக்கவில் லை. | 2012 ஒக்டோபர் 25 ஆம் திகதி அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் 16 ஆவது தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கட்டளையிடப்பட்டிந்த போதிலும் அந்த கட்டளை அமுல்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், மேற்கூறப்பட்ட விடுதிகளுடன் உள்ள காணி மஹாவலி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்கத்தின் காணிகளை அனுமதியற்ற வகையில் பிடித்து வைத்தல்.

---

| | | |
|---|---|---|
| அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் நில அளவையாளர் அதிகாரியின் 2010 நவம்பர் 29 ஆம் திகதிய கடிதம் மூலம் சியாரப்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரவில் கிராமங்களின் வீதிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான காணியில் 02 ரூட் மயான நிலத்திற்காகவும், 01 ரூட் புத்தர் சிலைக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இந்த மயான நிலத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிக்கு அடுத்தாலுள்ள விகாரையின் பங்களிப்பு சபையினால் | விகாராதிபதி மதகுருவினால் இந்த நிர்மாணங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றமையினால் அது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | காணிச் சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச வாசிகளினால் பல சந்தர்ப்பங்களின் போது பிரதேச செயலாளருக்கு அறிக்கையிடப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 19 ஆம் திகதி வரையிலும் இந்த மயான நிலத்தின் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக காணிச் சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சுழற்சி கடன் நிகழ்ச்சித் திட்டம்

------------------------------------------------

| | | |
|---|---|---|
| சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 200,000 தொகையான ஆரம்ப நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கட்டுவன பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ள மகளிர் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு ரூபா 5,000 தொகை, ரூபா 10,000 மற்றும் ரூபா 15,000 வீதம் சுய தொழில் வாய்ப்பிற்காக கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், கடன் தவணை 10 மாதங்களின் போது 6 சதவீத வட்டியுடன் அறவிடுவதற்கும் உடன்படிக்கை | நிலுவையாக காணப்பட்ட கடனை மீளச் செலுத்துமாறு கடனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த கால வட்டியை அறவிடுதல் தொடர்பாக ஆலோசனைகள் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், அது அதிகாரமுள்ள சபையின் மூலம் எடுக்கப்பட்ட இணக்கப்பாடாகும். | உரிய கடன் பணம் மற்றும் வட்டி என்பவற்றை குறித்த பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் கீழ் 39 கடன் பெறுனர்களினால் பெறப்பட்ட ரூபா 195,000 தொகையான கடன் பணம் உடன்படிக்கையின் பிராகரம் 10 மாதங்களில் செலுத்தப்படாதிருந்தமையால் கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 19 ஆம் திகதி வரையில் ரூபா 109,190 நிலுவைக் கடன் மீதியொன்று காணப்பட்டது. மேலும் உடன்படிக்கையின் பிரகாரம் 6 சதவீத வட்டியொன்று அறவிட வேண்டிய போதிலும், அவ்வாறான குறித்துரைத்த அடிப்படையொன்று இன்றி வட்டி அறவிடப்பட்டிருந்ததுடன், வட்டி அறவிடும் போது தவணைப் பணம் செலுத்தாத மாதங்களுக்காக திரண்ட வட்டி அறவிடுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச அதிகாரமுள்ள சபை ஊடாக இந்த இணக்கத்தினை பெற்றுக் கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | வீரகட்டிய பிரதேச செயலகப் பிரிவில் மெதமூலன சமூர்த்தி வங்கி சங்கத்தின் மூலம் கொவிட் 19 தொற்று நோய் நிலைமைக்கு சஹன அருணலு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமூர்த்தி பெறாத 23 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 115,000 கூட்டுத்தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமூர்த்தி உதவி பெறாத சமூக அங்கத்தவர்களுக்காக சமூர்த்தி அருணலு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க முடியுமாக இருந்தமையால் அவ்வாறு 23 நலனாளிகளுக்கு கடன் | குறித்த பிரகாரம் கடன் தவணைப் பணம் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டதுடன் அதனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | |

## 4. மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------

| கணக்காய்வு ஐயவினா தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் பதவியணியினர்களில் 136 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 33 மேலதிக பதவியணியினர்கள் தொடர்பாகவும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடம் மற்றும் மிகை அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வெற்றிடமான பதவியணியினர்களை ஆட்சேர்ப்பதற்கும் மிகையான பதவியணியினர்களுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |